## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.333/மா/2025

நாள் 24.11.2025

T.R. ஸ்ரீநிவாசன்
சென்னை 91 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 14
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவரின் 23.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.07.2025 அன்று பெறப்பட்டு 333/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

### ஆணை

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவர் 23.07.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 19வது தெருவில் மாநகராட்சி பூங்கா துறையின் கட்டுப்பாட்டின்கீழ் நிர்வாகம் செய்யப்படும் பூங்கா உள்ளது. இப்பூங்கா சுற்றி உள்ள சாலையின் மட்டத்தை விட தாழ்வாக உள்ளதால் பருவமழை காலங்களில் மேடாக உள்ள சாலையில் செல்லும் மழைநீர் மற்றும் சுற்றி உள்ள தெருக்களில் வடியும் மழைநீர் பூங்காவில் தேங்குகிறது. இதன் காரணம் பூங்கா சுற்று சுவர் செங்கல் கட்டுமானத்தில் அமைக்காமல், இரும்பு கிரில்களால் அமைக்கப்பட்டுள்ளதுதான். இதனால் மழை காலங்களில் பூங்கா முழுவதும் மழைநீர் தேங்கி கொசுக்கள் அதிகரித்து சுகாதார கேடு ஏற்படுகின்றது. பூங்கா அருகில் உள்ள வீடுகளுக்கும் வெள்ளம் ஏற்பட்டு, தரைத்தளத்தில் வசிப்போர் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

2. இதுகுறித்து 25.03.2025ல் மாநகராட்சி உயர் அதிகாரிகளுக்கு மனுதாரரால் மனு வழங்கப்பட்டது. மண்டலம் 14ன் 09.04.2025ன் வார்டு குழு கூட்டத்தில் பொருள் 21ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மண்டலம் 14ன் மூலம் 18.04.2025ல் மதிப்பீடு 12.23 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மாநகராட்சி பூங்கா துறை தலைமையிடத்திற்கு அனுப்பப்பட்டு, பெறப்பட்டுள்ளதாகவும் கண்காணிப்பாளர் பூங்கா துறை தலைமையிடம் 23.04.2025 கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார்.

மற்றும் 14.05.2025ன் தினமலர் பத்திரிக்கையில் பராமரிப்பற்ற பூங்காவை சீரமைக்க வலியுறுத்தல் என்ற தலைப்பில் செய்தியும் வந்துள்ளது. மாநகராட்சி தலைமையிட பூங்கா துறை கண்காணிப்பு பொறியாளர் 11.06.2025ன் கடிதம் வாயிலாக மதிப்பீடு அறிக்கை EST No. NP 2024-2025/12661 நாள் 24.09.2024ல் வரிசை எண் 1, 2, 3ல் Compound Wall West & East, North & Southல் அமைக்க திட்டமதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதன்படி இதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, டெண்டர் இறுதி செய்யப்பட்டு, ஒப்பந்ததாரர்க்கு பணியினை செய்திட பணி ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும், பூங்கா சுற்று சுவர் பணிகளை 2025 பருவமழைக்கு முன்னர் ஒப்பந்ததாரர் செய்து முடிப்பார் என்றும் தலைமையிட பூங்காதுறை கண்காணிப்பு பொறியாளர், செயற் பொறியாளர் தெரிவித்தனர். ஆனால் இதுவரை பூங்காவில் சுற்று சுவர் எழுப்பும் பணிகள் எதுவும் நடைபெறவில்லை.

3. 18.07.2025 அன்று தினமலரில் மாண்புமிகு முதலமைச்சர் பருவமழை காலம் துவங்கும் முன் வெள்ளம் அபாயம் இருக்கும் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முதலில் அங்கு பணிகளை முடிக்க வேண்டும் என மாநகராட்சி நிர்வாகத்திற்கு அறிவுறுத்தி உள்ளதாக அரசு செய்தி வந்துள்ளது.

இன்னும் ஓரிரு மாதங்களில் பருவமழை துவங்கிவிடும். வார்டு 186, பாலாஜி நகர் பகுதி வாழ் குடியிருப்பு பொதுமக்களின் நலன் கருதி, 2025 பருவ மழை துவங்கும் முன் பூங்காவின் சுற்று சுவரினை கட்டமைத்து, பூங்காவில் மழைநீர் தேங்காமலும், பூங்காவை சுற்றி உள்ள குடியிருப்புகளில் வெள்ள பாதிப்பு ஏற்படாத வகையில் பூங்கா சுற்று சுவர் கட்டமைக்கும் பணியினை போர்க்கால அடிப்படையில் விரைந்து துவங்கி முடித்திட பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவர் அவர்கள் எனது இந்த மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து, விசாரணைக்கு ஏற்று விசாரணை தேதி வழங்கி, விசாரணை செய்து 2025 பருவ மழைக்கு முன்னர் பூங்காவின் சுற்று சுவர் பணிகளை துவங்கி பாலாஜி நகர் குடியிருப்பு பகுதியில் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் மக்களை காத்திட போர்க்கால அடிப்படையில் உடனடியாக பணிகளை துவங்கிடவும், பருவமழைக்கு முன்னர் பணிகளை முடித்திடவும், உரிய ஆவண பிறப்பித்து உத்தரவு வழங்கிடுமாறும் பணிவுடன் வேண்டுகிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 03.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் மண்டல அலுவலர் 27.10.2025 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

> ''மனுதாரர் குறிப்பிட்டுள்ள பாலாஜி நகர் 19வது தெரு, பூங்காவிற்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணி தொடங்கி இருபுறமும் கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் பணி முடிவடைந்துள்ளது. தெற்கு பக்கம் பணி நடைபெற்று வருகிறது. பணி விரைவில் முடிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
>
> எனவே, மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று இம்மனுவினை இரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 28.10.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 28.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''மண்டலம் 14, வார்டு 186க்குட்பட்ட பாலாஜி நகர் 19வது தெருவில் உள்ள மாநகராட்சி பூங்காவில் தற்பொழுது காம்பவுண்ட் சுவர் அமைக்கும் பணி நடைபெறுகிறது. பூங்காவில் சிறுவர் விளையாட்டு உபகரணம், நடைபாதை டைல்ஸ், மாநகராட்சி பூங்கா முழுவதும் சுமார் 1 அடிக்கும் மேல் பள்ளமாக மண் நிரப்பப்படாமல் உள்ளது. இதனால் மழைக்காலங்களில் பூங்காவின் தண்ணீர் வெளியேறாமல், தேங்கி நிற்கிறது. மாநகராட்சி தலைமையிட கண்காணிப்பாளர், மேற்பார்வை பொறியாளர், பூங்கா துறை மற்றும் மண்டலம் 14–ன் அதிகாரிகள் விசாரணையின் சமயம் மேற்கண்ட பணிகளை அடுத்த இரு மாதங்களுக்குள் செய்து தருவதாக தெரிவித்துள்ளதன்படி, மேற்கண்ட பணிகளை குறிப்பிட்ட கால வரம்புக்குள் செய்து தந்திட, ஆவன செய்திடுமாறும், தகுந்த உத்தரவினை பிறப்பித்து ஆணை வழங்கிடுமாறும் பணிவுடன் வேண்டுகிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் கண்காணிப்பு பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் 28.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள பாலாஜி நகர் 19வது தெரு பூங்காவிற்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணி தொடங்கி கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் பணி முடிவடைந்துள்ளது. தெற்கு பக்கம் பணி நடைபெற்று வருகிறது. பணி விரைவில் முடிக்கப்படும் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

மேலும் வாதத்தின் போது மனுதாரர் குறிப்பிட்டவாறு பூங்காவின் உயரத்தை உயர்த்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 30.03.2026க்குள் பணி முடிக்கப்படும் என பணிவுடன் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.''.

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் கண்காணிப்பு பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மண்டலம் 14, வார்டு 186க்குட்பட்ட பாலாஜி நகர் 19வது தெருவில் உள்ள மாநகராட்சி பூங்காவில் தற்பொழுது காம்பவுண்ட் சுவர் அமைக்கும் பணி நடைபெறுகிறது என்பதும், பூங்காவில் சிறுவர் விளையாட்டு உபகரணம், நடைபாதை டைல்ஸ், மாநகராட்சி பூங்கா முழுவதும் சுமார் 1 அடிக்கும் மேல் பள்ளமாக மண் நிரப்பப்படாமல் உள்ளது என்பதும், இதனால் மழைக்காலங்களில் பூங்காவின் தண்ணீர் வெளியேறாமல், தேங்கி நிற்கிறது என்பதும் மாநகராட்சி தலைமையிட கண்காணிப்பாளர், மேற்பார்வை பொறியாளர், பூங்கா துறை மற்றும் மண்டலம் 14–ன் அதிகாரிகள் விசாரணையின் சமயம் மேற்கண்ட பணிகளை அடுத்த இரு மாதங்களுக்குள் செய்து தருவதாக தெரிவித்துள்ளதன்படி, மேற்கண்ட பணிகளை குறிப்பிட்ட கால வரம்புக்குள் செய்து தந்திட ஆவன செய்திடுமாறு கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகியது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பாலாஜி நகர் 19வது தெரு பூங்காவிற்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணி தொடங்கி கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் பணி முடிவடைந்துள்ளது என்பதும், தெற்கு பக்கம் பணி நடைபெற்று வருகிறது என்பதும் பணி விரைவில் முடிக்கப்படும் என்பதும், விசாரணையின் போது மனுதாரர் குறிப்பிட்டவாறு பூங்காவின் உயரத்தை உயர்த்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 30.03.2026க்குள் பணி முடிக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் கண்காணிப்பு பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14–ன் கண்காணிப்பு பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மண்டலம் 14, வார்டு 186, பாலாஜி நகர், 19வது தெருவில் உள்ள மாநகராட்சி பூங்காவில் தெற்கு பக்க தடுப்பு சுவர் மற்றும் பூங்காவின் உயரத்தை உயர்த்தும் பணியினை 30.03.2026–க்குள் செய்து முடிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 14–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு T.R. ஸ்ரீநிவாசன்
மனை என் 86, கதவு எண் 3/2
பாலாஜி நகர், 23வது தெரு,
புழுதிவாக்கம்,
சென்னை 91.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003

(3) மாவட்ட வருவாய் அலுவலர் /மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 664, புழுதிவாக்கம் பிரதான சாலை,
புழுதிவாக்கம்,
சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

26/11/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032